People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org
Web: www.pwtn.org

21.5.11

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்
அண்ணாசாலை
சென்னை 60002

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 16 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த14.5.2011 முதல் 20.4.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

**14-5-2011 முதல் 20-5-2011 முடிய இவ்வாரத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்**

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | – |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | – |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 23 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 5 |
| 5. | வகுப்பறை வன்முறை | 1 |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | – |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 2 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | – |
| 9. | கொத்தடிமை | – |
| 10. | பெண் சிசு கொலை | 1 |
| 11. | குழந்தை திருமணம் | – |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 5 |
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | – |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | – |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | – |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | 2 |
| 17. | மணல் கொள்ளை | 2 |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | – |

| | | |
|---|---|---|
| 19. | பழங்குடியினர் மீதான வன்முறை | – |
| 20. | முதியவர்கள் மீதான வன்முறை | – |
| 21. | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | – |
| 22. | பொதுவானவை | 1 |
| | மொத்தம் | 42 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

***(ஹென்றி டிபேன்)***
நிர்வாக இயக்குநர்

**நகல்கள்:**

தமிழகத் துணை முதல்வர்

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு-20
## 14.5.2011 முதல் 20.5.2011 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 1294. | 16.5.2011 | **மதுரை மாவட்டம்:** மீனாட்சிபுரத்தைச் சேர்ந்த ராமர் மனைவி வைரமணி(20). கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த வைரமணி தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினத்தந்தி |
| 1295. | 16.5.2011 | **புதுச்சேரி மாநிலம்:** புதுவை வில்லியனூர் அருகே உள்ள பிள்ளையார்குப்பத்தில் இருந்து இருசக்கர வாகனத்தில் வந்த 2 வாலிபர்கள் மீது, செல்லிப்பட்டி அருகே, மணல் ஏற்றி வந்த லாரி மோதியதில் மாணவர்கள் மரணம். ஆத்திரமடைந்த பொதுமக்கள் லாரியை தீ வைத்தனர். பொதுமக்களுக்கும் காவலர்களுக்கும் இடையே மோதல். போலீஸ் தடியடி. | காவல் நிலையச் சித்திரவதை | தினத்தந்தி |
| 1296. | 16.5.2011 | **விருதுநகர் மாவட்டம்:** வத்திராயிருப்பு அருகே வ.புதுப்பட்டி என்ற கிராமத்தில் இரு தரப்பினரிடையே மோதல். பெட்ரோல் குண்டுகள் வீசப்பட்டு 9 வீடுகள் எரிப்பு. காவல் நிலையம் தாக்கப்பட்டதாக புகார். | மோதல் | தினத்தந்தி |
| 1297. | 16.5.2011 | **திருச்சி மாவட்டம்:** திருச்சியில் உள்ள தமிழ்நாடு சிறப்பு காவல்படையில் பயிற்சி முடித்த பயிற்சி முடித்த பெண் காவலர் சங்கீதா(20). சிறப்பு காவல்படையில் எஸ்.ஐ.யாக பணிபுரியும் குமார் சங்கீதாவுக்கு ஆபாச எஸ்எம்எஸ் அனுப்பியும், செல்போனில் பேசியும் தொந்தரவு கொடுத்ததாக சங்கீதா குமார் மீது புகார். | பெண்கள் மீதாக வன்முறை | தினகரன் |
| 1298. | 16.5.2011 | **தேனி மாவட்டம்:** போடி மதுரைவீரன் தெருவைச் சேர்ந்த சந்திரன் மனைவி செல்வி(22). கணவன் மனைவி குடும்ப தகராறில் தாய் வீட்டில் இருந்த செல்வியை தன்னுடன் அனுப்புமாறு சந்திரன் வற்புறுத்தினாார். செல்வியின் தந்தை மறுப்பு. ஆத்திரமடைந்த சந்திரன் செல்வியின் அப்பா மற்றும் அம்மாவை கத்தியால் குத்தி கொலை செய்ய முயற்சி. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1299. | 17.5.2011 | **நாமக்கல் மாவட்டம்:** நாமக்கல் அடுத்த வேப்பனத்தத்தில் அன்பு இல்லம் உள்ளது. இங்கு 40 ஆதரவற்ற குழந்தைகள் விடுதியில் தங்கி | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | படித்துவருகின்றனர். அன்பு இல்ல நிர்வாகி கனககுமார் இல்லத்தில் தங்கியருந்த குழந்தைகளிடம் சில்மிஷம் செய்ததாக புகார். கனககுமார் கைது. | | |
| 1300. | 17.5.2011 | **மதுரை மாவட்டம்:** சிந்தாமணி பகுதியைச் சேர்ந்த கருப்பசாமி மனைவி ஆறுமுகவேலு(35). தனது நகையை கணவர் மற்றும் அவரது உறவினர் பறித்துக் கொண்டதாக ஆறுமுகவேலு புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1301. | 17.5.2011 | **கோவை மாவட்டம்:** கவுண்டம்பாளையத்தைச் சேர்ந்த பிரியதர்ஷினி(22). கோவை கணபதிபுதூரைச் சேர்ந்த குணசேகரன் ஊர்க்காவல் படையில் இருப்பதாக ஏமாற்றி பிரியதர்ஷினியைத் திருமணம் செய்துக் கொண்டதாக குணசேகரன் மீது புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1302. | 17.5.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை பட்டாலியன் காவலர்கள் பிரகாஷ்(21), மதன்ராஜ்(22), கார்த்திக்(21) மூவரும் மது அருந்திவிட்டு இருசக்கரவாகனத்தில் ரிசர்வ் லைன் அருகே சென்று கொண்டிருந்தனர். எஸ்.பி. அஸ்ராகர்க் காருக்கு முன் காவலர்கள் கூச்சலிட்டுச் தகராறு. மூவரும் கைது. | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 1303. | 18.5.2011 | **சிவகங்கை மாவட்டம்:** சிவகங்கை தியாகி சேதுராமச்சந்திரன் தெருவைச் சேர்ந்த முத்துகணேஷ் மனைவி நாகலட்சுமி(31). முத்துகணேசுக்கு ஏற்கனவே இரண்டு திருமணம் நடந்து தன்னை ஏமாற்றி மூன்றாவதாக திருமணம் செய்ததாக நாகலெட்சுமி புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 1304. | 18.5.2011 | **கோவை மாவட்டம்:** பொள்ளாச்சி அடுத்த ஆனைமலை மாசாணியம்மன் கோவில் உப்பாற்றங்கரையில் பச்சிளம் பெண் குழந்தை கிடந்ததாக புகார். காவலர்கள் குழந்தையை மீட்டு பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் அனுமதி. | காவல் நிலையச் சித்திரவதை | தினத்தந்தி |
| 1305. | 18.5.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** சென்னையிலிருந்து கர்நாடக மாநிலத்திற்கு கடத்த முயன்ற 10 டன் ரேசன்அரிசி கிருஷ்ணகிரி அருகே பறிமுதல். | ரேசன் அரிசி கொள்ளை | தீக்கதிர் |
| 1306. | 18.5.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை மாட்டுத்தாவணி பகுதியில் வசிக்கும் குறவர் சமூகத்தையைச் சேர்ந்த 2 சிறுமி மற்றும் 7 சிறுவர்களை பெற்றோர்கள். | குழந்தைகள் மீதான வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பிச்சை எடுக்க வற்புறுத்தியதாக புகார். | | |
| 1307. | 19.5.2011 | **மதுரை மாவட்டம்:** கொட்டாம்பட்டி அருகேயுள்ள அய்யாப்பட்டியைச் சேர்ந்த சேவுகன் மனைவி பார்வதி(23)யை காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1308. | 19.5.2011 | **மதுரை மாவட்டம்:** திருப்பாலையைச் சேர்ந்த தியாகராஜன் மனைவி சங்கீதா(30). கணவர் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதால் சங்கீதா தற்கொலை. தியாகராஜன் மீது சங்கீதாவின் பெற்றோர் புகார். | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 1309. | 19.5.2011 | **விருதுநகர் மாவட்டம்:** விருதுநகர் அருகே நந்திய ரெட்டியபட்டியைச் சேர்ந்த பிச்சாண்டி மகள் பாலாமணி(4) அங்கான்வாடியில் ஏற்பட்ட தீ விபத்தில் மரணம். இதற்கு காரணமான அங்கன்வாடி ஊழியர்கள் ராஜலெட்சுமி, பணியாளர் கமலாதேவி இருவர் பணிநீக்கம் செய்ய கலெக்டர் சண்முகம் உத்தரவு. | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 1310. | 19.5.2011 | **திருச்சி மாவட்டம்:** கரூர் இரட்டை வாய்க்கால் பகுதியைச் சேர்ந்த மேகலா(12). கரூர் மாரியம்மன் கோவிலில் அங்கப்பிரதட்சணம் செய்யும்போது மேகலாவின் கால் மீது கலெக்டர் உமாமகேஸ்வரியின் கார் ஏறியதில் காயம். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 1311. | 19.5.2011 | **திருப்பூர் மாவட்டம்:** திருப்பூரைச் சேர்ந்த டெய்லர் முத்துமாலை மனைவி ஜோதிமணி(19) திருப்பூரில் இருந்து காரைக்குடி செல்ல பேருந்தில் சென்றுள்ளார். கரூர் அருகே தனது ஏழு மாத பெண் குழந்தை அருகில் இருந்த பெண் கடத்திச் சென்றதாக ஜோதிமணி புகார். | குழந்தைகள் மீதான வன்முறை & கடத்தல் | தினமலர் |
| 1312. | 19.5.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** திண்டிவனம் ரயில் நிலைய பிளாட்பாரம் அருகே பச்சிளம் குழந்தையின் உடல் வீசப்பட்டு கிடந்ததாக பொதுமக்கள் புகார். | சிசுக்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 1313. | 19.5.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை மேரி ஆன் மெட்ரிக்குலேசன் பள்ளியில் கூடுதல் கல்விக் கட்டணம் செலுத்தாத மாணவர்களின் தேர்ச்சி அட்டையை பள்ளி நிாவாகம் நிறுத்தி வைத்திருப்பதாக புகார். | கூடுதல் கல்விக் கட்டணம் & வகுப்பறை வன்முறை | தீக்கதிர் |
| 1314. | 19.5.2011 | **மதுரை மாவட்டம்:** சிந்தாமணி புதுத்தெருவைச் சேர்ந்த வைரமுத்து ராஜா(32) மனைவி சரண்யாதேவி. கணவன், மனைவி குடும்பத்தகராறில் சரண்யா தனது தாய்வீட்டிற்கு | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சென்றுவிட்டார். சரண்யாதேவிக்கு நடந்த முதல் திருமணத்தை மறைத்து தனக்கு இரண்டாம் திருமணம் செய்ததாக வைரமுத்து மனைவி மற்றும் மாமனார் மீது புகார். | | |
| 1315. | 19.5.2011 | **தேனி மாவட்டம்:** ஆண்டிப்பட்டி ரங்கசமுத்திரம் பகுதியைச் சேர்ந்த கணேசன் மனைவி பிரியா(23). அடகு வைத்த தனது நகையை கணவர் திருப்பித்தராததால் மனமுடைந்த பிரியா தூக்குப்போட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தமிழ்சுடர் |
| 1316. | 19.5.2011 | **மதுரை மாவட்டம்:** பேரையூர் தாலுகா, எஸ்.மேலப்பட்டியைச் சேர்ந்த பவுன்ராஜ்(26) மனைவி செல்வராணி(19). கணவன் மனைவி குடும்பத் தகராறு. தாய் வீட்டில் இருந்த செல்வராணிக்கு தொலைபேசி மூலம் பவுன்ராஜ் தகாத வார்த்தைகளால் திட்டுவதாக கணவர் மீது செல்வராணி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 1317. | 19.5.2011 | **மதுரை மாவட்டம்:** பேரையூர் –சாப்டூர் ரோட்டில் அனுமதியின்றி மணல் கடத்தி வந்த டிராக்டரை பறிமுதல் செய்த அதிகாரிகளுக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக ராஜபாண்டி, காளிராஜன் இருவர் கைது. | மணல் கடத்தல் | தினத்தந்தி |
| 1318. | 19.5.2011 | **கரூர் மாவட்டம்:** கரூர் அருகே விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய மானியவிலை உரத்தில் ரூ.1.கோடியே 34 லட்சம் முறைகேடு செய்த வழக்கில் அதிகாரிகள் 7 பேர் கைது. | லஞ்சம் | தினத்தந்தி |
| 1319. | 19.5.2011 | **மதுரை மாவட்டம்:** பசுமலையைச் சேர்ந்த ஜான்பிரிட்டோ மனைவி சித்ரா(29). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணை கேட்டு துன்புறுத்தியதாக சித்ரா புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தினத்தந்தி |
| 1320. | 19.5.2011 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் வாலாஜா பல்லி வெங்கடாஜலபதி நகரைச் சேர்ந்த ரேகா(18). அதே பகுதியைச் சேர்ந்த அருண்குமார்(22) இருவரும் காதலித்தனர். திருமணம் செய்துக் கொள்வதாக ரேகாவை கடத்திச் சென்று ஆம்பூர் அடுத்த வேலம்மேற்கே மலை உச்சியில் வைத்து கொலை. அருண்குமார் கைது. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினத்தந்தி |
| 1321. | 19.5.2011 | **விருதுநகர் மாவட்டம்:** விருதுநகர் கன்னிசேரிபுதூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மகப்போறு நிதி வழங்குவதில் லஞ்சம் வசூலிக்கப்படுவதாக | லஞ்சம் | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பொதுமக்கள் புகார். ஆரம்ப சுகாதார நிலையத்தில் அதிகாரிகள் சோதனையின்போது ரூ. 11 ஆயிரம் பறிமுதல். | | |
| 1322. | 19.5.2011 | **நாகை மாவட்டம்:** தரங்கபாடி வைரக்கண்ணு மனைவி செல்வராணியை விசாரணைக்கு அழைத்துச் சென்ற காவலர்கள் துன்புறுத்தியதால் மனமுடைந்த செல்வராணி தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை | கலைஞர் டிவி |
| 1323. | 20.5.2011 | **மதுரை மாவட்டம்:** உத்தப்புரத்தில் இரு பிரிவினரிடையே தகராறு. பாதுகாப்பு காவலர்களுக்கும். ஒரு பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும் மோதல். காவல்துறை தடியடி. | காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 1324. | 20.5.2011 | **தேனி மாவட்டம்:** முத்துத்தேவன் பட்டியைச் சேர்ந்த கணேசன் மகள் கஸ்தூரி, கோட்டூரைச் சேர்ந்த தங்கநிதி மகன் எழில். இருவரும் காதலித்தனர். சுருளி தீர்த்தம் அருகே கஸ்தூரி பாலியல் செய்யப்பட்டதோடு இருவரும் கொலை செய்யப்பட்டனர். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தீக்கதிர் |
| 1325. | 20.5.2011 | **மதுரை மாவட்டம்:** திடீர் நகர் போலீஸ் சரகம் காஜிமார் தெருவில் வேனில் கடத்த முயன்ற 60 மூட்டை ரேசன் அரிசி அதிகாரிகள் சோதனையில் போது பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | தினமணி |
| 1326. | 20.5.2011 | **மதுரை மாவட்டம்:** அருப்புக்கோட்டையைச் சேர்ந்த பாண்டி மனைவி கவுரி(32). கணவர் மற்றும் குடும்பத்தார் தனக்கு மயக்க ஊசிப்போட்டு ஆபாசமாக படம் எடுத்து அதை வெளியிட்டதாக கணவர் மற்றும் குடும்பத்தார் மீது கவுரி புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 1327. | 20.5.2011 | **மதுரை மாவட்டம்:** சாப்டூர் அருகே ஓடையில் அனுமதியின்றி மணல் அள்ளிய டிராக்டர் பறிமுதல். மெய்யனூத்துப்பட்டியைச் சேர்ந்த ராஜபாண்டி(21), காளிராஜன்(18) கைது. | மணல் கொள்ளை | தினகரன் |
| 1328. | 20.5.2011 | **மதுரை மாவட்டம்:** அம்பலத்தடியைச் சேர்ந்த ராஜேந்திரன் மகள் பவித்ரா(18). பெற்றோர் திருமணத்திற்கு வற்புறுத்தியதால் மனமுடைந்த பவித்ரா தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 1329. | 20.5.2011 | **மதுரை மாவட்டம்:** மகாத்மா காந்தி நகரைச் சேர்ந்த மனுவேல் மனைவி அகராதி(24). கடைவீதியில் நடந்துச் சென்ற அகராதியை மகபூப்பாளையத்தைச் சேர்ந்த அக்பர் இடித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| 1330. | 20.5.2011 | **மதுரை மாவட்டம்:** அலங்காநல்லூர் கலைவாணன் நகரைச் சேர்ந்த ரூபி(22) அதே பகுதியைச் சேர்ந்த கார்மேகம்(22) இருவரும் காதலித்துத் திருமணம் செய்தனர். காதல் திருமணத்தை பதிவு செய்ய கணவர் மறுத்ததால் மனமுடைந்த கார்மேகம் விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 1331. | 20.5.2011 | **மதுரை மாவட்டம்:** அழகப்பன் நகரைச் சேர்ந்த ராதா(19). மீனாட்சி கல்லூரியில் பி.காம் முதலாம் ஆண்டு படித்து வந்தார். கடைக்குச் சென்ற ராதாவை காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 1332. | 20.5.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** ஸ்ரீவைகுண்டம் கோவில்பத்த தெருவைச் சேர்ந்த முத்துலெட்சுமியின் பிளஸ் 2 படிக்கும் மகளை அதே பகுதியைச் சேர்ந்த துரைப்பாண்டி கடத்திச் சென்றதாக முத்துலெட்சுமி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 1333. | 20.5.2011 | **நெல்லை மாவட்டம்:** ஆலங்குளம் தாலுகா, ஊத்துமலை அருகே, கண்ணாடிகுளம் கிராமத்தைச் சேர்ந்த செல்வராஜ் மனைவி தங்கமணி(35) திமுக ஒன்றிய கவுன்சிலர். செல்வராஜ் மற்றும் தங்கமணி இருவரையும் தொழில் போட்டியால் அதே பகுதியைச் சேர்ந்த மாரியம்மாள் மற்றும் சேகர் கொலை செய்ததாக கைது. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினத்தந்தி |
| 1334. | 20.5.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** கடையாலுமுடு போங்கின்காலை பகுதியைச் சேர்ந்த விஜயலெட்சுமி(23) அதே பகுதியைச் சேர்ந்த ரியாஸ்(27) இருவரும் காதலித்தனர். ரியாஸ் விஜலெட்சுமி திருமணம் செய்ய மறுத்ததோடு வேறு பெண்ணை திருமணம் செய்ய முயன்றதால் ரியாஸ் வீட்டு முன்பு விஜலெட்சுமி தர்ணா போராட்டம். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |